தலைவர் இந்த அளவிற்குப் பேரவையின் இதர அலுவல்களுக்குக் குந்தகம் ஏற்படுத்துவது முறை அல்ல; (குறுக்கீடு). நான் ஏற்கனவே அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே எழுப்புவதற்கு விதிகளில் எந்த வழியிலேயும் இடம் இல்லை (குறுக்கீடு) 56-இல் நான் மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்திருக்கிறேன். (குறுக்கீடு) அதை அங்கே வந்து கேட்க வேண்டும். இங்கே கேட்க முடியாது. (குறுக்கீடு) நான் சொல்கிறேன் கேளுங்கள். நான் அனுமதி மறுத்த பிரச்சினையை இங்கே வந்து கிளப்ப முடியாது. (குறுக்கீடு) 57-இல் கிளப்ப முடியாது. (குறுக்கீடு) அதற்குப் பிறகும் படியுங்கள். நான் அனுமதித்தால்தான் இங்கே 57, நான் அனுமதிக்காதபோது...(குறுக்கீடு) 58-ஐப் படியுங்கள். (குறுக்கீடு) 58-ஐப் படியுங்கள். 57, நான் அனுமதித்தால்– நான் அனுமதிக்கவில்லை என்னும்பொழுது 58, `The Speaker may withhold consent to the matter being raised before the House and in that case it shall be communicated to the member together with the reasons therefor... (குறுக்கீடு) நான் ரீசன்தான் சொல்லியிருக்கிறேன். அது இந்த ஃபோரம் அல்ல. (குறுக்கீடு) இல்லை, இல்லை. (குறுக்கீடு) நான் சொல்லாமல் யார் சொல்லுவது? இங்கே நான் ரீசன் சொல்லி விட்டேன். Speaker has to decide. (மேசையைத் தட்டும் ஒலி) `Speaker cannot tell' என்று சொல்லுகிற அதிகாரம் எதிர்க்கட்சித் தலைவருக்குக் கிடையாது. (குறுக்கீடு) அதற்குப் பிறகு ...and the member shall not raise the matter as such in the House.' என்றும் விதியிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏன்? (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்து உங்களுக்குக் கம்யூனிகேட் செய்ததற்குப் பிறகு நீங்கள் எந்த வகையிலேயும் இங்கே எழுப்ப முடியாது. (குறுக்கீடு) இங்கே எழுப்ப முடியாது என்கிறபொழுது எப்படி எழுப்புகிறீர்கள்? எழுப்ப முடியாது (குறுக்கீடு) எழுப்ப முடியாது என்கிறபொழுது எப்படி முடியும்? (குறுக்கீடு) நான் அனுமதி மறுத்திருக்கிறேன். நான் அனுமதி மறுத்த பிரச்சினையை எந்த அளவிலேயும் நீங்கள் எழுப்ப முடியாது. (குறுக்கீடு) இல்லை. எழுப்ப முடியாது.

3. கவன ஈர்ப்பு

(அ) கள்ளக்குறிச்சி, சங்கராபுரம் சாலை பழுதடைந்துள்ளதால் போக்குவரத்தும், பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு.

திரு. சி. இராமசுவாமி அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. இராமசுவாமி. (குறுக்கீடுகள்)

அவைக்கு (குறுக்கீடுகள்) அவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துவது முறையல்ல. (கூச்சல்-குழப்பம்)

2. தகவல் கோரல் — தொடர்ச்சி

(அ) அனுமதி மறுக்கப்பட்ட பிரச்சினையை அவையில் எழுப்புதல் — தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துதல் ஆகாது. உறுப்பினர்கள் இந்த முறையிலே பேரவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துதல் ஆகாது. (குறுக்கீடு) பேரவையின் நடவடிக்கைகளுக்கு. (கூச்சல்-குழப்பம்) குந்தகம் ஏற்படுத்தக் கூடாது.

(உறுப்பினர்கள் திரு. சஞ்சய் ராமசாமி, திரு. ஆர். சிங்காரம், திரு. கே. செல்வராஜ் மற்றும் திருமதி ஜீனத் சர்புதீன் ஆகியோரைத் தவிர, அவையில் இருந்த காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மற்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

முற்பகல் 11-30

பேரவையின் நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்துதல் ஆகாது. (கூச்சல்-குழப்பம்). இந்தமாதிரிக் குரல் எழுப்புகிற உறுப்பினர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டிவரும். விதியில், குரல் எழுப்பக் கூடாது என்றிருக்கிறது. (குறுக்கீடு) இந்தப் பேரவையின் கருத்தைப்பற்றி நீங்கள் சொன்னால் ஆகிவிடுமா? (கூச்சல்-குழப்பம்) திரு. ஈஸ்வரன், ஈஸ்வரன், இதையெல்லாம் வேறிடத்தில் போய்ப் பாருங்கள். (குறுக்கீடுகள்) இதையெல்லாம் வேறிடத்திலே போய்ப் பாருங்கள். இதெல்லாம் இங்கே நடக்காது. இந்தப் பேரவையைப் பொறுத்தமட்டில், இந்தப் பேரவையிலே இருக்கக்கூடிய தனிப்பெரும் மெஜாரிட்டியை மட்டுமே நான் கருத்திலே எடுத்துக்கொள்ள முடியும். இந்த மெஜாரிட்டி இருக்கிறபோது, அவர்கள் போடுகிற கோஷத்திற்கும், கூச்சலுக்கும் எந்த இடமும் இல்லை. (மேசையைத்